# புதினங்களில் புனைவுகள்

## ஆய்வின் நோக்கம்

இலக்கியத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குவது புதினமாகும். சமூக வாழ்வின் பிரதிபலிப்பாக புதினம் திகழ்கின்றது. மேலும் மனிதனுடைய உணர்வுபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தும் கலை வடிவம் என்று புதினத்தைக் கூறலாம். வாழ்க்கையில் நடைபெறும் உண்மைகளை கலைநயத்தோடு வெளிக்காட்டும் சிந்தனையின் Cற்றே புனைவாகும். புனைவு என்பது கற்பனை மட்டுமல்ல அது புதினத்தின் உயிர்நாடியாக கருதப்படுகிறது. புதினங்களில் புனைவு எவ்வாறு மாற்றம் அடைந்து சமூக சிந்தனைகளையும் மனிதனின் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கிறது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வின் முக்கியத்துவம்

கலை மற்றும் உண்மை இவ்விரண்டையும் இணைக்கும் பாலமாக புனைவு விளங்குகின்றது. இன்றைய தமிழ் புதினங்கள் சமூகவாழ்வு எவ்வாறு மாறுபடுகின்றது என்பதையும் மனித மனத்தின் ஆழங்களையும் புனைவின் மூலம் வெளிப்படுத்துகின்றன. இக்கால புதினங்கள் கதை சொல்கின்ற முறையில் இருந்து முற்றிலும் மாறி ஆழ்ந்த சிந்தனையையும் கற்பனையையும் இணைக்கும் புது வடிவங்களாக மாறியுள்ளன. அவ்வகையில் இவ்வாய்வு அம்மாற்றங்களை மிகவும் நுணுக்கமாக பதிவு செய்து தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சி நிலையை ஆராய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. எழுத்தாளர்களின் கற்பனையின் வெளிப்பாடுதான் புனைவு. நடைமுறை வாழ்வில் உள்ள உண்மை நிகழ்வுகளை கற்பனையோடு இணைத்து ஒரு

புதிய உலகத்தை படைப்பதில் புனைவு முக்கிய பங்காற்றுகிறது.

## புதினங்களில் புனைவின் தேவை

புனைவு இல்லை என்றால் புதினம் வெறும் தொகுப்பாக மட்டுமே இருக்கும். கற்பனையின் மூலம் தான் கதைகள் சுவாரசியமாக மாற்றம் அடைகின்றன. ஆகையால் புதினங்களில் அமைந்துள்ள உண்மைகளை மெருகூட்டி அழகு பார்ப்பதற்கு புனைவின் தேவை இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. புதினத்தின் இதயமாக புனைவு விளங்குகின்றது. புனைவு இல்லை என்றால் புதினம் உயிரற்றதாகிவிடும். எனவே புதினங்களில் புனைவு என்பது வெறும் கருவியாக மட்டுமல்லாமல் மனிதனுடைய அனுபவங்களை புதிதாக உணரச் செய்யும் சக்தியாக விளங்குகின்றது.

## ஆய்வின் கருதுகோள்

புனைவு என்பது கற்பனையைக் குறிக்கும் எனவே புனைவு சார் படைப்புகள் என்பவை கற்பனை திறனை வளர்க்கக் கூடியவை புதிய புதிய சிந்தனைகளும் காட்சிகளும் வடிவங்களும் வாழ்வியலும் வாழ்வியல் மாற்றங்களும் அறிவியலும் அறிவியல் மாற்றங்களும் நிகழ்வதற்கு அடிப்படையாக அமைபவை புனைவுகளே ஆகும். எனவே தற்கால படைப்புகளில் புனைவுகளின் போக்குகளை ஆய்வதே இவ்வாய்வின் கருதுகோளாக உள்ளது.